~~Typed~~

38

10

MSV 21

(7) பாடம்

வர்மஏடு.

முத்திரை

- MS. 19.

112

I

<u>உஹரி ஓம் நன்றாக குருவே துணை</u>

படுவர்மம் 13க்கும், தொடுவர்மம்-96க்கும் தட்டவும் இளக்கவும்.

[illegible]

நாளியலறியவும், குணம் அறியவும் வர்மத்தின் தலமறியவும் விபரம். நெத்தி, புருவத்திலும், ஒரு நெல்லிலும் தாழ "திலதவர்ம" மதில் கொண்டால் குணம் - கண்ணிரண்டும் மூடி அண்ணாந்து இருக்கும் இதுக்கு நாழிகை-[illegible] 3 3/4 கழிந்தால் மரித்துப் போகும். அதற்குமுன் இளக்குமுறை - தலைமுடி [illegible] தூக்கிப்பிடித்து கைமேல் கை பிணைத்து உச்சியில் ஒரு அடியும்அடித்து உடன் கழுத்தினை இடத்தும்,வலத்தும் திருப்பி செவி-2லும் ஊதி உடன் கெட்டிப்பிடித்து தூக்கி உதறி விடவும். வெந்நீர் கொடுக்கவும். இளகும்

<u>வர்மம்-1</u>: கடைக்கண்ணிலும் ஒரு விரற்கடையிறக்கிலும் அடுக்க "<u>நட்சேத்திர</u> வர்ம"தில்க் கொண்டால் குணம். முகஞ்சீறி முகங்கோணும். இது நாழிகை-18 கழிந்தால் மரித்துப்போம். இது இளகுமுறை - ~~எடுத்திருத்தி இருபுறமும் கைவைத்துப் பார்த்தால் கொண்டவிடம் குளிர்ந்திருக்கும். கொள்ளாத இடம் வெதும்பும். வெதும்புத்தலங்கண்டு இளக்குமுறை எடுத்திருத்தி யிருபுறமும்~~ கை விரித்து பதத்திலடித்து கீழ்நோக்கி தடவி விடவும். உடன் கைமேல் கை பிணைத்து உச்சியில் ஒரு அடியும் அடித்து செவியிலும் மூக்கிலும் ஊதி கழுத்தை நாலுபுறமும் கீழ்நோக்கி தடவி கெட்டிப்பிடித்து கீழ்நோக்கி உதறிவிடவும். இளகும்.

<u>வர்மம்.3</u>: பிடரியில் முடிமுளைந்த தலத்தில் பிடரிவர்மத்தில் கொண்டால் குணம் பதைப்பும், நுரையும் தள்ளும், கண் 2-ம் முடிக்கும். நாழிகை-7 கழிந்தால் மரித்துப்போம். அதுக்குமுன் யிளக்குமுறை - எடுத்திருத்தி நாடியும், தலையும் நேரே தூக்கி நாடியை குபீரென்று மேல்நோக்கி உயர்த்தி பிடரியில் நின்று கை பிணைத்து உச்சியிலொரு அடியும் அடித்து (காது மூக்கும்) காதிலும் மூக்கிலும் ஊதி கட்டித் தூக்கி உதறி விடவும். இளகும்.

<u>வர்மம்-4</u>: கழுத்தில் காடி அருகுப்பத்தி உறக்க வர்மம் - அதில் <u>கொண்டால்</u> குணம். வாய்மூடிப்போகும் நாக்கு தாழ்ந்து போகும். உடலெல்லாம் போகும் /ப இதுக்கு நாழிகை-10. கழிந்தாலும் மரித்துப் போகாது. தட்டி யிளகாதே யிருந்தாலும் தானே யெழும்பும் அதுக்குமுன் [illegible] விளக்குமுறை எடுத்திருத்தி நாடியை ஏந்திப் பிடித்து நெஞ்சில்-நின்று மேல்நோக்கித் தடவி கைமேல் [illegible] பிணைத்து உச்சியில் பதத்தில் 2 அடியும் அடித்து கழுத்தை யிடத்தும் வலத்தும் திருப்பி நாசி 2-லும்---பிடரி குளிக்கு ஒ சாலிலும் கீழ் கை விரித்து ஒரு அடியும் அடித்து கட்டிப் பிடித்து ஊதி உதறி விடவும். இளகும்.

(*) கீழ்நோக்கி மூன்றுதரம் தடவி உடன் [illegible]

<u>வர்மம்-5</u>: நெஞ்சில் காறையெலும்பு இறை யுருகுபத்தி தொண்டைக் குழிக்கு ஒரு திவள வர்மமதில் கொண்டால் குணம். ஒரு நாழிகைக்கு ஒருமுறை இருமும், தலை குனைந்து விழும். கண்டு 2-ம் அடிக்கும். பல்லுப் பூண்டு போகும் இதிலும் நாழிகை 19-க்கு கழிந்தால் மரித்துப்போம். அதன்முன் <u>யிளக்குமுறை</u>:- எடுத்திருத்தி பிடரிக்கு வெட்டு விரலுக்குத் தாழ கைபொத்தி நேர்குத்தி பிடரியிலும் நாடியிலும் பிடித்து தூக்கி காறை-யெலும்புக்குத் தாழ கைவிரித்து தொடித்து உடன் கைமேல் கையிணைத்து உச்சியிலொரு அடியும் அடித்து கட்டிப் பிடித்து கீழ்நோக்கி உதறி விடவும். கஞ்சி கொடுக்கவும். இளகும்.

— — — - - —

<u>வர்மம்-6</u>: நெஞ்சில் கும்பெல்லி யிருவிரலிலும் தாழ யுருகுபதி நேருவர்மம் அதில் கொண்டால் குணம். உடம்பெல்லாம் குளிர்ந்து பேச்சத்துப்போம். பல்லும் வாயும் பூண்டு போகும். அரக்கன் போட்டு முழிக்கும். வர்மம் உச்சம் கொண்டால் இரத்தம் கக்கும் அது கண்டு பயப்பட வேண்டாம். இதின் நாழிகை-30. கழிந்தால் மரித்துப்போம். அதற்கு முன் யிளக்குமுறை எடுத்திருத்தி கைமேல் கை பிணைத்து உச்சியில் ஒரு அடியும்அடித்து நடுமுதுகு வரியில் புறங்கால் கொண்டு ஒரு தட்டுந் தட்டி நெஞ்சிலும், விலாவிலும் கீழ் நோக்கித் தடவி இறக்கி உடன் கட்டிப்பிடித்துத் தூக்கி உதறி விடவும். இளகும் இந்த வர்மம் ஆறையும் அறையாமல் செய்யலாம்.

<u>வர்மம்-7</u>: விலாவில் முன்டெல்லிலும் தாழ விரலுக்குயர் அடப்ப வர்மத்தில் கொண்டால் குணம். காலும் கையும் முதிர்ந்து போகும்வாயில் பதைதள்ளும். இதன் நாழிகை-28. கழிந்தால் புரிச்சிப்போம்.

<u>இளக்குமுறை</u>:- எடுத்திருத்தி மறுவிலாவில் பிறங்கால் கொண்டு ஒருதட்டுந் தட்டி முதுகுவரியில் புறங்கால் கொண்டு ஒருதட்டுந் தட்டி கைமேல் கை பிணைத்து உச்சியிலொரு அடியும் அடித்துத் தூக்கி உதறி விடவும். விலா இரண்டிலும் ஒன்று போல தடவி யிறக்கி இளகும்.

<u>வர்மம்</u>-8: விலாவில் முன்டெல்லிலும், இருவிரலிலும் தாழ "வலிய அத்தி சுருக்கி" வர்மமதில் கொண்டால் குணம். பிடித்தொரு முழத்தில் குறுகும். இதின் நாழிகை-15. இதற்கு <u>இளக்குமுறை</u>:- அச்செல்லிலும்மறு புறத்தில் புறங்கால் கொண்டு ஒரு தட்டுந் தட்டி நடுமுதுகு வரியில் கைமேல் கைபிணைத்து உச்சியிலொரு அடியும் அடித்து இரண்டு கையையும் விரித்து விலா இரண்டும் ஒன்று போலே பதத்தில் தட்டி கீழ்நோக்கி தடவி இறக்கி உடன் கட்டிப் பிடித்து தூக்கி உதறி விடவும். இளகும். உழக்கரிசியிலரிய உப்பிட்டுக் கஞ்சி கொடுத்தாலும் 41 நாட்கள் செல்லும் போது (முதலில்) இருந்தவாறே இருந்தால் மரிக்கும். இந்த வர்மம் கொடிய பாவம். சர்வ குருவினானே சத்தியம்.

(*) புறங்கால் கொண்டு ஒரு தட்டும் தட்டி

வர்மம்-9: விலாவில் மூன்றுவிரலினும் தாழ "சிறிய அத்தி சுருக்கி" வர்மத்-திலும் வலிய அத்தி சுருக்கி வர்மமத்திலும் குனம். ஒன்று இதுக்கு நாழிகை-16 கழிந்தால் மரித்துப்போம். இதற்கு இளக்க முறை:- அச்செவ்விலும் மறு புறத்தில் புறங்கால் கொண்டு ஒரு தட்டுந்தட்டி கைமேல் கைபிணைத்து (முதுகுவரியிலையும்..............) உச்சியிலொரு அடியும் அடித்து நெஞ்சிலும், விலாவிலும் கீழ்நோக்கி தடவி கட்டிப்பிடித்துத் ஊக்கி கீழ நோக்கி உதறி விடவும். இளகும். உழவரிசியிட்டுக் கஞ்சி கொடுக்கவும். சுகமானாலும் ஒரு புறம் சரிந்து நடக்கும்.

வர்மம்-10: கொப்புளுக்கு நாலுவிரலுக்கு மேலே உறுமி வர்மம். அதில் கொண்டால் குனம். உறுமி அமரியாப் போலே உறுமும் கண்விழித்துப் பார்க்கும். விழித்தால் விளிகேளாது. காலில் பெருவிரல் இடிக்கும் இதன் நாழிகை-12 கழிந்தால் மரித்துப்போகும்.

இதுக்கு இளக்குமுறை:- அச்செவ்விலும், மறுபுறத்தில் முதுகுவரியில் புறங்கால் கொண்டு 2 தட்டுந்தட்டி நெஞ்சில் நின்று வயிறு வரையும் கீழ்நோக்கி தடவி கைமேல் கை பிணைத்து உச்சியிலொரு அடியும் அடித்து கட்டி ஊக்கி உதறி விடவும். இளகும்.

வர்மம்.11:- கொப்புளுக்கு நாலு விரலுக்குக் கீழே மாத்திரக்காலமதில் கொண்டால் குனம். சுரிசுராய் மோதும் துள்ளி போடும். உடலெல்லாம் நிமிந்து போகும் மேல்மூச் செடுக்கும். இதினுடைய நாழிகை-33 கழிந்தால் மரித்துப்போம் இது இளக்குமுறை:- கொண்ட இடத்தில் படல்கால் கொண்டு கீழ்நோக்கி பதத்தில் சமட்டி இறக்கி மாறி நின்று நாங்கல் பொருத்தில் உப்புக் குத்து குத்தி காலு கொண்டு ஒரு சமட்டு சமட்டி உடன் கைமேல் கைபிணைத்து உச்சியிலொரு அடியும் அடித்து நடுமுதுகு வரியில் புறங்கால் கொண்டு ஒரு தட்டுந் தட்டி கட்டித் ஊக்கி கீழ்நோக்கி உதறி விடவும். இளகும் குரு சத்தியம்.

வர்மம்-12:- இந்த வர்மத்தின் விபரம் அடக்கவர்மம் என்றும், அண்டவர்ம-மென்றும், கல்லடகாலமென்றும், வித்துவர்மமென்றும், தண்டுவர்மமென்றும் பேர். ஆக காலம், அடக்கவர்மத் திரதியில் கொண்டால் குனம். உடம்பெல்லாங் குள்ளி குறைந்து போகும். கண்ணிரண்டும் மூடிப்போம். இதின் நாழிகை-19½ கழிந்தால் மரித்துப்போம். அதற்கு முன் இளக்குமுறை:- அண்டையாகிலும், நாக்காலியாகிலும், கலையமாகிலும் கூட்டி அதன்மேல் வைத்து கைமேல் கை பிணைத்து (உரைத்து) உச்சியிலொரு அடியும் அடித்து நடுமுதுகு வரியில் கீழ் புறங்கால் கொண்டு ஒரு தட்டுந் தட்டினால் உடன் வித்து 2-ம் கீழே விழும். உடன் இடது கையில் பிடித்து 2 விரல் வீதியில் எட்டுவிரல் நீளத்தில் வெள்ள சீலை கீறி பச்சதண்ணீரில் (குளிர்ந்தநீர்) நனைத்து சுத்தி விடவும் நிற்கும். குரு சத்தியம்.

வர்மம்-13:- இந்த வர்மம் 13-ம் தட்டியால்-13 பிசாசு பிடிக்கும் ஆக வர்மம் 13-க்கும் தண்ணீர் ஓதியெறிய மந்திரம். ஓம் நசிவாயா- வாகாவென் றெறியவும். இளகும். குருசத்தியம்-ஆக வர்மம் 13க்கும் ஆக இளக்கு காலத்தில் யிளக்கமுறை:- எடுத்திருத்தி மூல ஆதாரத்தில் பிறமேக வங்க குளியென்று இரண்டுகுளி யுண்டு. அதில் 2 விரல் கொண்டு இருத்தி உடன் கைமேல் கை பிணைத்து உச்சியில் பதத்தில் 2 அடியும் அடித்துடன் நடுமுதுகு வரியில் புறங்கால் கொண்டு ஒரு சூட்டித் தட்டி வலதுகை விரித்து நெஞ்சில் பதத்தில் தட்டி வலது விலாவும், இடது விலாவும் கீழ்நோக்கித்தடவி புறமே நின்றுகொண்டு கயக்குளியில் 2 கையுமிட்டுத் தூக்கி நிலத்தில் ஒன்று குத்தி செவியிலும் மூக்கிலும் ஊதி யிளக்கிக் கொள்ளவும். இளகும். இது சத்தியம். அடக்கம் பார்த்து இளக்க முறை-நாசியருகு பத்தி புறங்கை வைத்துப் பார்த்தால் சரம் தட்டியால் இளக்கிக் கொள்ளவும். இது ஆட்சம் பார்க்கிறது எப்படியானால் பஞ்சு வைத்துப் பார்த்தால் சரம்தட்டியால் யிளக்கிக் கொள்ளவும், இந்தப்படி சூட்சம் பார்த்தால் சரம் தட்டவில்லை யானால் இளக்க வேண்டாம். மீளாது குரு சத்தியம்.

வர்மம் 13-க்கும் பெருங்குணமும், தலமும் தட்டுவானும், இளக்குவானும் குருவாக்கின்படி, முன்னேட்டின்படி ஒளியாமல் சரியாகச் சொன்னேன். இது குரு சத்தியம்.

இந்த வர்மாணி (வாங்கவேணுமானால், அறிவேண்டுமானால்) 18 பணமும், 75 உடுப்பு வேட்டியும், ஈதெல்லாம் முன்கொடுத்து பொன்னும் விளக்கும் வைத்து சத்தியம் செய்து வாங்கிக் கொண்டு இந்த வர்மாணி ஏடு கொடுக்கவும். குரு சத்தியம்.

இந்த வர்மாணி ஏடு யாருக்கென்றால் குலசென்னைப் பட்டினத்தில் அஞ்சு வர்ணத் தெருவிலிருக்கும் அசனங்கன் சௌமுக்கியர் மகன் முகைதின் சராசத்தி- னுக்கு எழுதிக்கொடுத்தது. யாரென்றால் மலையாளத்தில் குளச்சையில் பந்தடை- யில் இருக்கும் மர்வீனாடை அவர்கள்மகன் முகமது மீதின் அண்ணாவி இந்த வர்மாணி பாத்துதான் செய்கிறது அல்லாமல் (மறவா) ஒருவருக்கும் சொல்லவும் காட்டவும் கூடாது. குரு சத்தியம்.

நானாகிலும், என் மகனாகிலும் வந்து கேட்டால் இந்த ஏடு(பெறத்) எழுதி கொடுக்கவும். அண்ணாவிக்கு மனம் நோகாமல் கியாத்துள்ள வரையும் விசாரித்துக் கொள்ளவும், இந்த வர்மாணியேடு நீடூழி காலம் வாழ்க ஆமின். இயாரைப்பலால் மீன்(ஷுரு) முகம்மது நபி தனை, 1832 வருடம் புரட்டாசி மாதம் 6-ந்தேதி எழுதி முடிந்தது. முற்றும். ஆமின்

நன்றாக குருவே முகம்மதுநபி துணை.

1. ஒதிரம் வெட்டி கட்டி கடைதலை கொடுத்து எழும்பி ஆறுவாகுந் தீர்ந்து தொழுது கொள்ளவும்., 2. ஒதிரம் வெட்டி கட்டி பிடித்தோதிரம் வெட்டி 6 வாகுந்தீர்ந்து கடதலை முன்தலை வெட்டி கீதாரு யெடுத்து மேதாறு வைத்துக் கொள்ளவும். 3. ஒதிரம் வெட்டி கட்டி பிடி தோதிர வெட்டி 6 வாகுந் தீர்ந்து கடைதலை 3 வெட்டி [illegible] (யெ)டத்தே அடித்து வலத்தே கட்டி 6 வாகுந் தீர்ந்து கீதாரு மேதாறு வைத்துக் கொள்ளவும். 4. ஒதிரம் வெட்டி கட்டி 6 வாகுந் தீர்ந்து கடைதலை 3 தீர்ந்து இடத்தே அடித்து வலத்தே கட்டி 6 வாகுந் தீர்ந்து கடைதலை, முனைதலை வெட்டி யேதிவான் அடித்து முனைதலை வைத்துக் கோரி வலத்தை அடித்து இடத்தே பிடித்து உச்சம் கீதார் மேதார் வெட்டி நெஞ்சில் குத்தி ஆறு வாகுந் தீர்ந்து சந்துமாறி மறுபுறமும் இதுபோலே செய்து கொள்ளவும். 5. ஒதிரம் வெட்டி இடத்தேஅடித்து வலத்தே பிடித்து 6 வாகும் வெட்டி கடதலை, முனைதலை வெட்டி 6 வாகுந்தீர்ந்து முனைதலை கோரி போட்டு 4 வாகும்போட்டு உச்சம் கீதாரை மேதாரை வெட்டி நெஞ்சில் குத்தி விலாவுக்கு அடித்து சந்துமாறிக் கொள்ளவும். மறுபுறம் இதுபோலே செய்து கொள்ளவும். 6. ஒதிரம் கட்டி 6 வாகுந் தீர்ந்து கடதலை, முன்தலை வெட்டி ஆறுவாகுந் தீர்ந்து கடதலை முன்தலை வெட்டி ஆறுவாகுந் தீர்ந்து உச்சம் கீதாரை மேல்தாரை அடித்து விலாவுக்கு அடித்து நெஞ்சில் குத்தி ஆறு வாகுஞ் செய்து காலுக்கு அடித்து ஆறு வாகுஞ் செய்து சந்துமாறிக் கொள்ளவும். 7-வது வலத்தே அடித்து இடத்தே பிடித்து, இடத்தே அடித்து, இடித்தே பிடித்து மேதாரை மூணு வாகும்அடித்து கீதாரை மேதாரை அடித்து குதிச்சு போகவும். 8-வது 3 வாகும் வெட்டி இடத்தே கோரி, வலத்தேவைத்து கீதாரை யெடுத்து மேதாரை மூணு வாகும் வெட்டி, கீதாரை மேதாரை வெட்டி குதித்துப் போகவும். 10-வது மண்டை கடித்து விலாவுக்கு அடி காலுக்கும் அடித்து அண்டைக்கு ஒரு அடி அடித்து கீதாரை மேதாரை வெட்டி குதித்துப் போகவும். 11-வது [illegible] திலதத்துக்கு பிடரிக்கு மேலே யிடது நட்சேத்திரத்துக்கு கீழ்கிலே ஆறு ஒருதா புட்டினால் செப்புக்கு மேலே பள்ளைவர்மம் இதில் விரல் கோண .... தள்ளி கழத்தவும், இந்த வர்மம் கொண்டால் மறு பள்ளையில் தட்டி யெழுப்பவும் இதுக்கு நாழிகை 21.

<u>தொடர்ச்சி இல்லை</u>.

மூக்கு மூணு விரலுக்கு மேலே திலதகாலம் இது கொண்டால் மறுபுறந் தட்டியெழுப்பவும். இது செய்யும் குணம்- கண் அண்ணாந்து பார்க்கும், இதுக்கு நாளிகை- 3 3/4

கடைக்கண்ணில் நட்சேத்திர காலம், இதுகொண்டால் மறுபுறம் தட்டி யெழுப்பவும், இது செய்யுங் குணம்- ஒருபுறம் சரிந்து பார்க்கும். இது கண்டறியவும் இதுக்கு நாழிகை - 5½.

முட்டி சிக்கி மேலே உறக்க காலம். இது கொண்டால் மறுபுறந் தட்டி எழுப்பவுவம். இது செய்யுங் குணம். உறங்கினவர் போலே கிடக்கும். இது கண்டறியவும், இது நாழிகை-17½.

மாருக்கு நாலு விரலுக்கு மேலே அடித்தால் வரும். இது கொண்டால் மறுபுறந் தட்டி யெழுப்பவும். இது செய்யும் குணம். நாக்கு தள்ளும். வாயினாலே நுரை நுரையாகத் தள்ளும். இது கண்டறியவும். இதுக்கு நாழிகை-13½.

அதுக்கு மூணுவிரலுக்கு மேலே வில்லு வரும். இது கொண்டால் மறு-புறந் தட்டி யெழுப்பவும்,, இது செய்யுங் குணம். வில்லுப்போலே வளைந்து கூனிக் கொள்ளும். கவுந்து கிடக்கும். இது கண்டறியவும். இதுக்கு நாழிகை-9¼.

நட்சேத்திர காலத்துக்கு நாலு விரலுக்கு அடுத்து செலிகுத்து வரும். இது கொண்டால் மறுபுறந் தட்டி எழுப்பவும். இது செய்யுங் குணம். சுருண்டு விழுந்து கிடக்கும். இது இன்மெதிரி கண்டறியவும் இதுக்கு நாழிகை 3½.

முடிச்சிக்கி ஒருவிரலுக்கு மேலே உறக்க காலம். இது கொண்டால் மறுபுறந் தட்டி யெழுப்பவும் இது நாழிகை.17½.

அதுக்கு இரண்டுவிரலுக்குக் கீழே சங்கு திருவிவரும். இது கொண்டால் மறுபுறம் தட்டி யெழுப்பவும். இதுக்கு நாழிகை-1 3/4

நெஞ்சில் கொழுந்தில் குலை வரும். இது கொண்டால் மறுபுறத் தட்டி யெழுப்பவும். இது செய்யும் குணம். சரீரம் முழுவதும் காயும். செத்தவன் போலே கிடப்பான் இது கண்டறியவும். இதுக்கு நாழிகை- 7½

அதுக்கு நாலு விரலுக்குக் கீழே குடல் வரும், இது கொண்டால் மறு-புறந் தட்டி யெழுப்பவும். இது செய்யுங் குணம். வயிறு ஊறும். இதுகண்டறியவும் இதுக்கு நாழிகை-13.

கொப்புளுக்கு 3 விரலுக்குக் கீழே மோத்திரக் காலம். இது கொண்டால் மறுபுறந் தட்டி எழுப்பவும். இது செய்யுங் குணம். ஒருபானை 2 பானை போலே மோளுவான். இது கண்டறியவும் இதுக்கு நாழிகை-1 3/4

பீசத்தில் அண்டவரும். இது கொண்டால் உச்சியிலும் உள்ளங்காலிலும் தட்டி முதுகிலிருந்து கீழே வரையும் தடவி கழுத்திலிருந்து நெஞ்சின் வழியாக தடவி இறக்கி விடவும். மூலத்தில் தட்டி யெழுப்பிக் கொள்ளவும். இதற்கு நாழிகை-4 3/4.

வர்மம் 72-ம் வலசு பிரம இடது [illegible] செவி வலது செவி இடது வில்லுக்கு வலது வில்லு இடது நாடிக்கும், வலது நாடிக்கும். கொஞுந்துக்கு அதற்குநேர் முதுகு குடல் வர்மத்துக்கு அதற்கு நேர் முதுகு மொத்த காலத்துக்கு நேர் பிட்டம். அடகக்காலம் [illegible] நெஞ்சில் குத்தி புட்டியில் ரெண்டு இடத்தில் தட்டி விடவும். மூளி விடவும்.

வலது மணிகொட்டு
இடது மணி கொட்டு
மண்டைக்கு
கடநலை கொப்புளுக்கு
கீழ்தாற்றெடுத்து தீரவை.
